பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை - 4
16 03 2026 MONDAY 6 30 PM
வணக்கம் - மாநிலச் செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

- தேர்தல் நடத்தை நெறிமுறைகளை அரசியல் கட்சிகள் முழுமையாக பின்பற்ற வேண்டும் என்று தேர்தல் ஆணையம் கேட்டுக் கொண்டுள்ளது.
- நேபாளத்தில் நேரிட்ட சாலைவிபத்தில் உயிரிழந்த தமிழர்களின் உடலை சொந்த ஊருக்கு கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.
- சாகித்ய அகாடமி விருது, “தமிழ்ச் சிறுகதையின் தடங்கள்” என்ற நூலுக்காக திரு. ச. தமிழ்ச்செல்வனுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.
- தமிழகத்தின் ஒரு சில பகுதிகளில் அடுத்த நான்கு தினங்களுக்கு மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.
- கிரீஸ் சர்வதேச Wushu ஓப்பன் போட்டியில், இந்தியா 7 தங்கம், 9 வெள்ளி, 8 வெண்கலப்பதக்கங்களை வென்றது.

>>>>>>>><<<<<<<<

தேர்தல் நடத்தை நெறிமுறைகளை சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினரும் முழுமையாக பின்பற்ற வேண்டும் என்று தேர்தல் ஆணையம் கேட்டுக் கொண்டுள்ளது.

தேர்தல் நடத்தை நெறிமுறை மீறல் குறித்த புகார்களை C-Vigil செயலியில் தெரிவிக்குமாறும் தேர்தல் ஆணையம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

1 9 5 0 என்ற எண்ணை தொடர்பு கொண்டு புகார்களை தெரிவிக்கலாம் என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தேர்தல் நடைபெறவுள்ள மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசத்தில் ஐயாயிரத்திற்கும் மேற்பட்ட பறக்கும் படையினரும், ஐயாயிரத்திற்கும் மேற்பட்ட கண்காணிப்பு குழுவினரும் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையே, அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுடன் தமிழக தலைமை தேர்தல் அதிகாரி திருமதி. அர்ச்சனா பட்நாயக் இன்று சென்னையில் ஆலோசனை மேற்கொண்டார்.

தேர்தல் நடத்தை நெறிமுறைகள் குறித்து இக்கூட்டத்தில் எடுத்துரைத்த அவர், அனைத்து அரசியல் கட்சிகளும் இதனை முழுமையாக பின்பற்ற வேண்டும் என்று வலியுறுத்தினார்.

இந்நிலையில், கரூர், ஈரோடு, நாகை, விருதுநகர் மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர்களை, தேர்தல் ஆணையம் இடமாற்றம் செய்துள்ளது.

>>>>>>><<<<<<<<

நேபாளத்தில் நேரிட்ட சாலைவிபத்தில் உயிரிழந்த தமிழர்களின் உடலை சொந்த ஊருக்கு கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக, அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், பொள்ளாச்சி, தேவகோட்டை பகுதிகளிலிருந்து ஆன்மிக சுற்றுலா சென்றவர்கள் இந்த விபத்தில் சிக்கியதாக குறிப்பிட்டுள்ளார்.

இறந்தவர்களின் உடலை, நாளை தில்லி கொண்டு வந்து பின்னர் அவர்களது சொந்த ஊர்களுக்கு அனுப்பி வைக்க, நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

>>>>>>><<<<<<<<

திமுக மாவட்ட செயலாளர்கள் கூட்டம் அக்கட்சியின் தலைவர் திரு மு.க.ஸ்டாலின் தலைமையில் இன்று சென்னையில் நடைபெற்றது.

சட்டப்பேரவை தேர்தலில் மேற்கொள்ள வேண்டிய அணுகுமுறைகள் குறித்து இக்கூட்டத்தில் விரிவாக விவாதிக்கப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>>>>><<<<<<<<

அத்தியாவசிய பொருட்களின் விலை உயர்வை கட்டுப்படுத்த திமுக அரசு தவறிவிட்டதாக அஇஅதிமுக குற்றம் சாட்டியுள்ளது.

இதுதொடர்பாக, அக்கட்சி வெளியிட்டுள்ள அறிக்கையில் பெண்களுக்கு எதிரான பாலியல் வன்கொடுமை சம்பவங்கள் அதிகரித்துள்ளதாக குறை கூறியுள்ளது.

போதைப்பொருள் புழக்கத்தை கட்டுப்படுத்தவும் திமுக அரசு தவறிவிட்டதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>>>><<<<<<<<

தமிழகத்தில், பெண்களுக்கு எதிரான பாலியல் குற்றங்கள் அதிகரித்துள்ளதாக பிஜேபி குற்றம் சாட்டியுள்ளது.

இதுதொடர்பாக அக்கட்சி வெளியிட்டுள்ள அறிக்கையில், நாள்தோறும் பாலியல் வன்கொடுமை சம்பவங்கள் நடைபெறுவதாக கூறி, அவற்றை பட்டியலிட்டுள்ளது.

திமுக அரசு இதனை கட்டுப்படுத்த தவறிவிட்டதாகவும் பிஜேபி அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளது.

>>>>>>><<<<<<<<

திமுக தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்டுப்பாட்டுடன் செயல்பட்டு வருவதாக தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் திரு. செல்வப்பெருந்தகை கூறியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், கூட்டணி கட்சிகளுடனான தொகுதிப் பங்கீடு ஓரிரு நாட்களில் இறுதி செய்யப்படும் என்று தெரிவித்துள்ளார்.

திமுக அரசு செயல்படுத்திய திட்டங்களால் கோடிக்கணக்கான பெண்கள் பயனடைந்திருப்பதாகவும் திரு. செல்வப்பெருந்தகை அந்த அறிக்கையில் கூறியுள்ளார்.

>>>>>>><<<<<<<<

சாகித்ய அகாடமி விருது, ‘‘தமிழ்ச் சிறுகதையின் தடங்கள்’’ என்ற நூலுக்காக எழுத்தாளர் ச. தமிழ்ச்செல்வனுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விருது தமக்கு அறிவிக்கப்பட்டிருப்பது மகிழ்ச்சி அளிப்பதாக உள்ளது என்று திரு. தமிழ்ச்செல்வன் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

(சவுண்ட் பைட் - தமிழ்ச்செல்வன் 77 செகண்ட்ஸ்)

>>>>>>><<<<<<<<

சென்னை விமான நிலையத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் மேம்பாட்டுப் பணிகள் காரணமாக, போக்குவரத்து மாற்றங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

இந்த மாற்றங்கள் 40 நாட்களுக்கு செயல்பாட்டில் இருக்கும் என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் - சுரேகா 47 செகண்ட்ஸ்)

>>>>>>><<<<<<<<

தமிழகத்தின் ஒரு சில பகுதிகளில் அடுத்த நான்கு தினங்களுக்கு மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மைய தென்மண்டல இயக்குநர் டாக்டர் வி.ஆர். துரை கூறியுள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

(சவுண்ட் பைட் வி.ஆர். துரை 35 செகண்ட்ஸ்)

>>>>>>><<<<<<<<

மாவட்டச் செய்திகள்

கடலூர் மாவட்டத்தில் தேர்தல் நடத்தை நெறிமுறைகள் மீறல் குறித்து பெறப்படும் புகார்கள் மீது 100 நிமிடங்களில் தீர்வு காணப்படும் என்று ஆட்சியர் திரு. சிபி ஆதித்யா செந்தில்குமார் கூறியுள்ளார்.

>>>>>>><<<<<<<<

கோவை மாவட்டத்தில், சட்டப்பேரவை தேர்தலுக்கென 24 மணி நேரமும் செயல்படும் கட்டுப்பாட்டு மையம் ஏற்படுத்தப்பட்டுள்தாக ஆட்சியர் திரு பவன் குமார் தெரிவித்துள்ளார்.

>>>>>>><<<<<<<<

திருவள்ளூர் மாவட்டத்தில் 260 வாக்குச்சாவடிகள் பதற்றமானவை என கண்டறியப்பட்டுள்ளதாக ஆட்சியர் திரு. பிரதாப் கூறியுள்ளார்.

>>>>>>><<<<<<<<

திருப்பூர் மாவட்டத்தில் மலைவாழ் மக்கள் 100 சதவீதம் வாக்களிப்பதை உறுதி செய்யும் வகையில் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்படுவதாக ஆட்சியர் திரு. மனீஷ் தெரிவித்துள்ளார்.

>>>>>>><<<<<<<<

வேலூர் மாவட்டத்தில் தேர்தல் நடத்தை நெறிமுறைகள் குறித்த புகார்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்காக 15 குழுக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக ஆட்சியர் திருமதி. சுப்புலெட்சுமி கூறியுள்ளார்.

>>>>>>><<<<<<<<

மதுரை மாவட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிதிகள் கூட்டம், ஆட்சியர் திரு. பிரவின்குமார் தலைமையில் இன்று நடைபெற்றது.

>>>>>>><<<<<<<<

காஞ்சிபுரம் மாவட்டத்தில் 123 வாக்குச்சாவடிகள் பதற்றமானவை என கண்டறியப்பட்டுள்ளதாக ஆட்சியர் திருமதி. சினேகா கூறியுள்ளார்.

>>>>>>><<<<<<<<

செங்கல்பட்டு மாவட்டத்தில் தேர்தல் பணியில் 15 ஆயிரத்திற்கு மேற்பட்ட அரசு ஊழியர்களும், 6 ஆயிரத்துக்கு மேற்பட்ட காவல்துறையினரும் ஈடுபடுத்தப்படவுள்ளதாக ஆட்சியர் திருமதி. மாலதி ஹெலன் தெரிவித்துள்ளார்.

>>>>>>><<<<<<<<

விளையாட்டுச் செய்திகள்

கிரீஸ் சர்வதேச Wushu ஓப்பன் போட்டியில், இந்தியா 7 தங்கம், 9 வெள்ளி, 8 வெண்கலப்பதக்கங்களை வென்றது.

15 வயதுக்குட்பட்டோருக்கான மகளிர் 42 கிலோ எடைப்பிரிவில் Munda Sabini-யும், மகளிர் 60 கிலோ எடைப்பிரிவில் ஜோதியும், 18 வயதுக்குட்பட்டோருக்கான மகளிர் 52 கிலோ எடைப்பிரிவில் Jain Anushka Dattatraya-வும், 15 வயதுக்குட்பட்டோருக்கான மகளிர் பிரிவில் Kalra Anairrah-வும் தங்கப்பதக்கம் வென்றனர்.

ஆடவர் பிரிவுகளில் Namdeo Yash இரண்டு தங்கப்பதக்கங்களையும், Harvinder Singh ஒரு தங்கப்பதக்கத்தையும் வென்றனர்.

>>>>>>>END<<<<<<<<